DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 338/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.ஜோசப் ஜெட்சன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 10th July 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 11.12.2016ம் தேதி 13.00 மணிக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் முத்துலட்சுமி நிலையப்பொறுப்பில் இருந்தபோது பால்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக்குற்ற எண்.143/2016 ச/பி.454, 380 இதச வழக்கை அப்போதைய காவல் ஆய்வாளராக சங்கரேஸ்வரன் என்பவர் முதல் விசாரணை செய்தார். **மேற்கண்ட புகார் மனு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு நான் 24.07.2017ம் தேதி இவ்வழக்கு கோப்பை எனதுமேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடமான சங்கரன்கோவில் கணபதி நகர் 3ம் தெரு இரயில்வே பீடர் ரோடு வாதியின் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன்.முந்தைய விசாரணை அதிகாரி தயார் செய்து வைத்திருந்த பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சரியாக இருந்ததால் நான் மீண்டும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை நான் தயார் செய்யவில்லை. பின்பு 02.01.2018ம் தேதிசங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய பெண் உதவி ஆய்வாளர் அன்னலட்சுமி பதிவு செய்து வைத்திருந்த குற்ற எண்.306/2017 ச/பி.379 இதச வழக்கின் எதிரிகளை தேடி செல்லும் போது காலை 9.00 மணிக்கு களப்பாகுளம் சண்முகாநகருக்கு கீழ்புறம் உள்ள ஒத்தையடி பாதை செல்லும் முட்புதரில் வைத்து சாட்சிகள் பார்த்திபன், அந்தோணி ராஜ் முன்னிலையில் எதிரிகள் நாகராஜ், பால்மணி, மகேந்திரன், முத்துக்குமார், அஜீத்குமார், ராஜா, சிவா, ஜோசப் சேவியர், கார்த்திக் ஆகியோரை கைது செய்து விசாரித்தபோது எதிரி நாகராஜ் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சங்ரன்கோவில் தாலூக காவல்நிலைய குற்ற எண்.143/2016 ச/பி.454, 380 இதச வழக்கின் குற்றச் சம்பவத்தை எதிரிகள் செய்தது தொடர்பாகவும், இவ்வழக்கின் சொத்துக்களை திருடியது தொடர்பாகவும், இவ்வழக்கின் சொத்துக்களுள் இளம்சிறார் ராஜா என்ற கோச்சாவிடம் 40கி எடைஉள்ளஇதயம் மாடல் தாலிசெயினையும், இளம்சிறார் சிவா என்ற கொருவா என்பவரிடம் 16கி எடை உள்ள சிவப்புக்கல் பதித்த நெகலஸ்யும் எதிரி கொடுத்தார் என்றும், இவ்வழக்கின் திருட்டு சம்பவத்தை செய்வதற்கு பயன்படுத்திய இரும்புகம்பியை மகேந்திரன் என்ற மகி என்பவர் வீட்டுக்கு முன்பு மறைத்து வைத்துள்ளதாகவும், அங்கு கூட்டிச்சென்றால் அந்த இரும்பு கம்பியை ஆஜர் செய்வதாகவும், இவ்வழக்கில் திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை ஆஜர் செய்கின்றதாகவும் தெரிவித்தார். மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் முன்னிலையில் இளம்சிறார் ராஜா என்ற கோச்சா மேற்குறிப்பிட்ட 40 கிராம் எடையுள்ள இதயம் மாடல் தங்க தாலிசெயினையும், இளம்சிறார் சிவா என்ற கொருவா 16கி எடை உள்ள சிவப்பு கல் பதித்த தங்க நெக்லஸ்யும் உதவி ஆய்வாளர் அன்னலட்சுமியிடம் எடுத்து ஆஜர் செய்தனர். அதை அவர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். பின்னர் சம்பவத்தில் கதவை உடைக்க பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள இரும்பு கம்பியை மகேந்திரன் என்பவர் வீட்டு முன்பு வைத்து 02.01.2018ம் தேதி 12 மணிக்கு ஆஜர் செய்ததை உதவி ஆய்வாளர் அன்னலட்சுமி

அத்தாட்சியில் கைப்பற்றினார். எதிரிகளும் மற்றும் கைப்பற்றப்பட்ட மேற்கண்ட சொத்துக்களும் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்திற்கு 13.30 மணிக்கு அன்றையதினம் கொண்டு வரப்பட்டனர். மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலையும், மேற்கண்ட அத்தாட்சியின் உண்மை நகலையும், கைப்பற்றப்பட்ட மேற்கண்ட சொத்துக்களையும் உதவி ஆய்வாளர் அன்னலட்சுமி என்னிடம் ஒப்படைத்தார். கைது செய்யப்பட்ட எதிரிகளுள் 3 இளம்சிறார்களை தவிர்த்து மீதமுள்ள இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட 6 எதிரிகளையும் நீதிமன்றத்திற்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பிவைத்தேன். கைப்பற்றப்பட்ட 40 கிராம் எடை உள்ள இதயம் மாடல் தங்க தாலிசெயினையும்,16 கி எடை உள்ள சிவப்புக்கல் பதித்த தங்க நெக்லஸ் ஒன்றையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நுனிப்பாகம் வளைந்த நிலையில் உள்ள 34 செமீ நீளமுள்ள இரும்புக்கம்பி ஒன்றையும் படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **எதிரி நாகராஜ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 9 ஆகவும், 02.01.2018 ம் தேதி 12 மணிக்கு பிறப்பிக்கப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகவும், இரும்புக்கம்பிக்கான படிவம் 91 அ.சா.ஆ.11 ஆகவும், 40 கி எடை உள்ள தங்கதாலி மற்றும் 16 கி எடை உள்ள தங்க நெக்லஸ் ஆகியவற்றிற்கான படிவம் 91 அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** 23.03.2018 ம் தேதி இவ்வழக்கின் விசாரணையை முடித்து 6 எதிரிகளுக்கு எதிராக சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும், 3 இளம்சிறார்களுக்கு எதிராக திருநெல்வேலி நீதிக்குழுமத்திலும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் எப்பொழுது ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் 24.07.2017 ம் தேதி சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். இவ்வழக்கின் சாட்சிகளை நான் விசாரித்து தனியாக மறுவாக்குமூலம் பதிவுசெய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடத்தை நான் தயாரிக்கவில்லை என்றால் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முந்தைய விசாரணை அதிகாரியால் தயார் செய்துவைக்கப்பட்டது. நான் சம்பவ இடத்திற்கு

சென்று பார்வையிட்டபோது அதில் உள்ள விபரங்கள் நான் பார்வையிட்டதற்கு ஒத்திருந்ததால் நான் எந்த பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரிகளை நான் நேரடியாக கைது செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் 2ம் எதிரியான பால்மணி என்ற குருநாதனுக்கு எதிராக சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் நிலையக்குற்ற எண்.306/2017 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அந்த நிலையத்திற்கு பொறுப்பு அதிகாரி என்ற நிலையில் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்படும் வழக்குகளின் கோப்புகள் படி அவற்றில் எடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்கண்ட சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையக்குற்ற எண்.306/2017 வழக்கில் குற்ற இறுதி அறிக்கையில் Action drop என்று தெரிவித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அந்த குற்ற அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் TN 76 G 123 என்ற பதிவெண் கொண்ட சுமோ வாகனம் ரோந்துப்பணிக்காக எங்களால் வாங்கப்பட்டதா என்றால் நான் ஆய்வாளராக இருந்த சமயத்தில் சுமோ வாகனம் இருந்தது. அதன் பதிவெண் தற்போது ஞாபகம் இல்லை. 01.01.2018ம் தேதி திருச்செந்தூர் கோவிலில் நடைபயணம் சென்றுகொண்டிருந்த 1,2,3, 6 எதிரிகளை நானும், தாலுகா காவல்நிலைய காவலர்களும் மேற்படி சுமோ வாகனத்தில் மேற்கூறிய கோவிலுக்கு சென்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகளை தாலுகா காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் சரியல்ல. மேற்கண்ட எதிரிகளை நாங்கள் தாலுகா காவல்நிலையத்திற்கு கோவிலிருந்து அழைத்து வந்தோம் என்றாலும், அதன்பிறகு 1ம் எதிரியின் பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாக கைப்பற்றிய 19 கிராம் எடையுள்ள தங்க நெக்லஸை இவ்வழக்கின் சொத்துக்களுள் ஒன்றாக படிவம் 91ல் தெரிவித்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்துதள்ள புகார் மனுவில் 282 கிராம் எடையுள்ள தங்க நகைகள் காணாமல் போனதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 280 கிராம் எடையுள் தங்க நகைகள் காணாமல் போனதாக புகார்தாரர் புகார் மனுவில் கூறியுள்ளார். புகார் மனுவில்

எந்த நகைகள் காணாமல் போய்விட்டன என்று குறிப்பிட்டு புகார்தாரர் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் எதிரியான நாகராஜ் என்ற கொங்குவின் தந்தை மற்றும தாத்தா அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மேற்கண்ட 19 கி எடை உள்ள நெக்லஸ் மீண்டும் ஒப்படைக்கக்கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கூறியவாறு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், மேற்கண்ட 19கி நகை சங்கரன்கோவிலில் உள்ள திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கியில் அடகு வைக்கப்பட்டு திருப்பப்பட்டதற்கான ரசீதையும் மனுவுடன தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், அம்மனு பொறுத்து எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அறிவிப்பு எதுவும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை. நான் உண்மைக்கு புறம்பாக அறிவிப்பு கிடைக்கவில்லை என்று பொய் கூறுகிறேன் என்றாலும், நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவிப்பிலிருந்து நான் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் புகார் மனுவில் குறிப்பிட்ட நகைகளுக்கும், இவ்வழக்கில் படிவம் 91 மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நகைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. படிவம் 91 மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நகைகள் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் நான் அவரிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரிகளுக்கு எதிராக பொய்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சிகப்புக்கல் பதிக்கப்பட்ட நெக்லஸ் 1ம் எதிரியின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**